DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No.95/2024

PROSECUTION WITNESS No - PW- 5

| | | | |
|---|---|---|---|
| Name : | கலாராணி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2026.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை :</u>

1) நான் தற்போது மதுரை மாநகர் அண்ணாநகர் காவல் நிலைய குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.12.2021 ல் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் உலகம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது எனது கட்டுப்பாட்டில் வரும் புழுதிப்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த நாசர் என்பவர் நிலைய குற்ற எண்.95/2021ல் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act மற்றும் 304(A) இதச படி பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் பார்வைக்கு வைத்து வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக என் வசம் ஒப்படைத்தார். சார்பு ஆய்வாளர் நாசர் என்பவர் தயாரித்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.இவ்வழக்கில் அன்றைய தினமே பகல் 10.30 மணியளவில் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துகொண்ட நான் வழக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீரமலை, மச்சக்காளை ஆகியோர்களை சாட்சிகளாக வைத்து சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். மேற்படி நான் தயாரித்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது மற்றும் மாதிரி

வரைபடம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் வண்டியை ஓட்டி வந்து கவனக்குறைவாக ஓட்டி இறந்து போன தமிழரசனின் உடல் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன்அடிப்படையில் பிரேத பரிசோதனைக்கு முன் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயாரித்தேன். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி ராமசாமி என்பவரை வலசை பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்து சாட்சிகள் பழனிசாமி மற்றும் குமரேசன் ஆகியோர் முன்னிலையில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் TN 10 R 6331 என்ற JCB யில் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் ஆகியவைகளை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகஜர்கள் முறையே **அ.சா.ஆ.9** மற்றும் **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இங்கு என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களிலுள்ள வாகனங்கள் தான் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் ஆகும் . மேற்படி TN 10 R 6331 என்ற JCB யில் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் வாகனங்கள் முறையே **சா.பொ.1** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் டிராக்டரை ஓட்டி வந்து காயம்பட்ட தமிழரசன் என்பவருக்கு அரசு பாப்பாயி மருத்துவமனையில் முதலில் வழங்கப்பட்ட காயச்சான்று **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட நபர் இறந்ததை உறுதி செய்தபின் பொன்னமராவதி மருத்துவமனையில் பெறப்பட்ட மருத்துவர் மூலம் வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கடந்த 03.02.2022 ம் தேதி தடய அறிவியல் கூடத்திலிருந்து பெறப்பட்ட விஸ்ரா அறிக்கை **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 31.05.2022 ல் இவ்வழக்கில் இறந்து போன நபர்

வழக்கின் குற்றவாளி பட்டியலில் இருந்து எதிரி நீக்கப்பட்டு அதற்கு நான் தயாரித்த எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 31.05.2022 ல் இவ்வழக்கில் குற்ற பிரிவு இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act மற்றும் 304(A) இதச பிரிவுகளிலிருந்து 304(A) இதச பிரிவை நீக்கம் செய்து நான் தயாரித்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றிய சொத்துகளான TN 10 R 6331 என்ற JCB யில் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் ஆகிய வாகனங்களை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த படிவம் 91 மூலம் அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 முறையே **அ.சா.ஆ.16** மற்றும் **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் சாட்சிகளான லாவண்யா, செல்வம், பாலகிருஷ்ணன், மணிமுத்து, ராமகிருஷ்ணன், பூங்கோதை, பழனிச்சாமி, குமரேசன், வீரமலை, மச்சக்காளை, மாணிக்கம், மருத்துவர் பிரியதர்ஷினி, காவலர் தமிழரசன், சார்பு ஆய்வாளர் நாசர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்த நிலையில் உரிய சான்றிதழ்கள் பெற்று இவ்வழக்கின் கடந்த 31.05.2022 ல் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் பாலகிருஷ்ணன், பழனிச்சாமி, வீரமலை ஆகியோர்களை சொன்ன செய்திகளைத்தான் வாக்குமூலங்களாக பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகாரை கடந்த 06.04.2022 ல் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கையில் தாக்கல் செய்தேன். மேற்படி குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகார் **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 13 கி.மீ என்றால் சரிதான். வழக்கு சம்பவம் 23.12.2021 ம் தேதி அதிகாலை 02.00

மணிக்கு சம்பவம் நடந்ததாக கூறி அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 08.00 மணி நேர காலதாமதம் குறித்து புகாரிலோ விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காலை 11.00 மணிக்கு தயாரித்ததாக சொல்லப்பட்ட மாதிரி வரைபடத்தில் டிராக்டர் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அன்று மாலை டிராக்டர் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சொந்தக்காரரர் ஆன அழகர் என்பவரை இவ்வழக்கின் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் தனிநபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எந்த இடத்தில் எந்த சர்வே எண்ணில் கிராவல் மண் அள்ளப்பட்டது என்ற விவரம் புகாரிலோ, விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புகைப்படங்கள் சம்பவ இடத்தில் வைத்து எடுக்கப்பட்டதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கனிம வள அதிகாரிகள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நடக்கவில்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக உயர் அதிகாரிகனின் ஆலோசனையின் பேரில் புகாருக்கு ஆதரவாக தயாரிக்கப்பட்ட புலன் விசாரணை அறிக்கை அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் கண்டதாக எந்த சாட்சியம் இல்லை என்றால் சரிதான். சம்பவம் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நடக்கவில்லை என்றும் எதிரியை சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் எதிரிக்கும் சம்வத்திற்கு தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் சொன்ன

விதத்தில் பெறப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 16:03:28 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை